செய்தி வெளியீடு எண் : 1746 நாள் : 07.10.2022

## செய்தி வெளியீடு

**கோயம்புத்தூர் பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்ட தின விழாவை முன்னிட்டு பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்டம் துவங்க முக்கிய காரணமாக இருந்த பெருந்தலைவர் காமராஜர், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.கே.பழனிசாமி கவுண்டர், பாரத ரத்னா சி.சுப்பிரமணியம், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.பொள்ளாச்சி நா.மகாலிங்கம், முன்னாள் நீர்வளத் துறை அமைச்சர் பத்மபூஷன் டாக்டர் கே.எல்.ராவ் ஆகியோரின் திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் அரசின் சார்பில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்**

---

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை சாலையில் உள்ள மஹாராஜா மஹாலில் பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்ட தின விழாவை முன்னிட்டு இன்று (07.10.2022) பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்டம் துவங்க முக்கிய காரணமாக இருந்த பெருந்தலைவர் காமராஜர், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.கே.பழனிசாமி கவுண்டர், பாரத ரத்னா சி.சுப்பிரமணியம், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.பொள்ளாச்சி நா.மகாலிங்கம், முன்னாள் நீர்வளத் துறை அமைச்சர் பத்மபூஷன் டாக்டர் கே.எல்.ராவ் ஆகியோரின் திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் அரசின் சார்பில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, மேனாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.கே.பழனிசாமி கவுண்டர், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மரு.ஜெயராஜ், வி.எஸ்.அருள், பாரத ரத்னா சி.சுப்பிரமணியம், அவர்களின் குடும்ப உறுப்பினர் கல்பனா தேவி சுந்தர்ராஜ், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.பொள்ளாச்சி நா.மகாலிங்கம், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மரு.மாணிக்கம், ஹரிஹரசுதன் ஆகியோருக்கு மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் சால்வை அணிவித்து சிறப்பித்தார்.

இவ்விழாவில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கு.சண்முகசுந்தரம், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் இ.ஆ.ப., பொள்ளாச்சி சார் ஆட்சியர் திரு. தாக்கரேசுபம் ஞானதேவ்ராவ் இ.ஆ.ப., நீர்வளத்துறை தலைமைப்பொறியாளர் பொ.முத்துசாமி, கண்காணிப்பு பொறியாளர் தேவராஜன், செயற்பொறியாளர் ரவி, வருவாய் கோட்டாட்சியர்(திருப்பூர்) யஸ்வந்த்கண்ணன், முன்னாள் அமைச்சர் மு.கண்ணப்பன், மடத்துக்குளம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜெயராம்கிருஷ்ணன், திருமூர்த்தி நீர்தேக்க திட்டக்குழு முன்னாள் தலைவர் திரு.மெடிக்கல் கே.பரமசிவம், ஆழியார் பாசன சங்க தலைவர் திரு.ஏ.கே.சின்னசாமி, பாசன சங்க பிரதிநிதிகள், உழவர் உழைப்பாளர் கட்சித்தலைவர் திரு. கு.க.செல்லமுத்து, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**இவ்விழாவில் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்ததாவது,**

கொங்கு மண்டலத்தில் முக்கியமான பெரிய பாசன திட்டம் பரம்பிக்குளம் ஆழியார் பாசனத்திட்டமாக திகழ்கிறது. பொள்ளாச்சி பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் இருந்த திரு.வி.கே.பழனிசாமி கவுண்டர், பாரத ரத்னா சி.சுப்பிரமணியம், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.பொள்ளாச்சி நா.மகாலிங்கம், முன்னாள் நீர்வளத் துறை அமைச்சர் பத்மபூஷன் டாக்டர் கே.எல்.ராவ் ஆகியோர்களின் தொடர் முயற்சியாலும், அப்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் ஆட்சிக்காலத்தில் பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டம் இந்தியப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களால் 7.10.1961 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் தற்பொழுது இலட்சக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. அருகில் உள்ள கேரளா மாநிலத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு மிகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட திட்டமாகும். வீணாக கடலில் கலக்கும் தண்ணீரை தடுத்து, மலைகளை குடைந்து, இரு மலைகளை இணைத்து கால்வாய் வழியாக தண்ணீரை

பாசனத்திற்காக ஆழியாறு, திருமூர்த்தி அணைகளில் தேக்கி வைக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தினை கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் உருவாக்கி தந்த, இம்மாமனிதர்களை நினைவு கூறும் வகையிலும், அவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, செய்தித்துறை மற்றும் நீர்வளத்துறை இணைந்து முதல் முறையாக பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்ட தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இவ்விழாவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.கே.பழனிசாமி கவுண்டர், பாரத ரத்னா சி.சுப்பிரமணியம், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.பொள்ளாச்சி நா.மகாலிங்கம், சோலையாறு அணை கட்டுமான பணியில் பொறியாளராக பணியாற்றி ஆசியாவில் கல்லினால் ஆன அணையினை வடிவமைத்து, கட்டிய முன்னாள் நீர்வளத் துறை அமைச்சர் பத்மபூஷன் டாக்டர் கே.எல்.ராவ் அவர்கள் ஆகியோரின் திருவுருவப் படத்திற்கும் இன்று மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டுள்ளது.

பொள்ளாச்சியில் செயல்படும் நீர்வளத்துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்திற்கு பாரத ரத்னா "சி.சுப்பிரமணியம் வளாகம்" என்ற பெயரும், இவ்வளாகத்தில், விவசாயப் பெருமக்களுக்குப் பயிற்சிகள் மற்றும் கருத்தரங்கம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்திட ஏதுவாக இரண்டு அடுக்குகள் கொண்ட புதிய அரங்கும், இவ்வரங்கத்திற்கு "வி.கே.பழனிசாமி அரங்கம்" எனப் பெயரும், மேல்தளத்தில் அமைக்கப்படும் அரங்கத்திற்கு "பொள்ளாச்சி நா.மகாலிங்கம்" அவர்களின் பெயரும், இம்மண்டபத்தில் பரம்பிக்குளம் ஆழியாறுத் திட்டப்பணிகள் குறித்துப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் புகைப்படக் கண்காட்சியும் அமைக்கப்படும்.

மேலும், வி.கே.பழனிசாமி கவுண்டர் அவர்களுக்கு ஆழியாறு அணையின் பூங்காவில் நினைவு மண்டபம் அமைக்கும் பணியினை பிஏபி. திட்டப்பணிகள் நடைபெற்றபோது ஏற்பட்ட விபத்தில் உயிர்நீத்தவர்களுக்கான நினைவுமண்டபமாக மாற்றி அமைக்கப்படும்.

பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்ட நாளை முதல்முறையாக இன்று அரசு விழாவாக கொண்டாடப்படுகிறது. இதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு விவசாயிகளின் சார்பாக நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கேரளா மாநில முதலமைச்சர் அவர்களை சந்தித்து ஆனைமலை ஆறு, நல்லாறு திட்டம், கீழ்பவானி பாசனத்திட்டத்திற்கு உறுதுணையாக பாண்டியாறு புன்னம்புழா ஆறு திட்டத்தினை நிறைவேற்றுதல் தொடர்பாக கடிதத்தை அளித்தார்கள். இதுதொடர்பாக திட்டங்களை நிறைவேற்ற அனைவருக்கும் ஒன்றிணைந்து செயல்படுவோம். என மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in